**வாரியபொல பிரதேச சபை - 2022**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வாரியபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து வாரியபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 6,223,438 தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வேலை ஆரம்பிக்கப்படாத 21 செயற்திட்டங்களுக்குரிய பெறுமதி ரூபா 48,393,117 தொகை கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | துரிதமாக இச்செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 620,000 பெறுமதியான 06 காணிகளின் பெறுமதியும் ஏடுகளில் குறிப்பிடப்படாத 5 காணிகளின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உளளடக்கப்படவில்லை. | இக்குறைபாடு அடுத:துவரும் காலங்களில் சரிசெய்யப்படும் . | - மேற்படி - |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 08 கணக்கு விடயங்களின் பெறுமதிக்கும் துணைப்பதிவேடுகளின் மொத்திற்குமிடையே ரூபா 4,668,257 வித்தியாசம் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும்.. |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரச் சட்டத்தின் 126 (ஊ) ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 55 விளம்பர பலகைகளிலிருந்து 2022 ஆம் ஆண்டின் போது விளம்பர பலகை கட்டணம் அறவிடப்படவில்லை. | இப்பணத்தில் சில தற்பொழுது அறவிடப்பட்டுள்ளது டன் மிகுதிப் பணத்தையும் துரிதமாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 1,792,758 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,966,795 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நிலுவை** |
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீத வரியும் வரியும் | 15 | 76 | 76 | 0 | 15 | - | 15 | 0 |
| வாடகை | 1887 | 1989 | 1865 | 124 | 2206 | 1399 | 967 | 432 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 112 | 972 | 972 | 0 | 100 | 867 | 867 | 0 |
| ஏனைய வருமானம் | 9369 | 14196 | 10513 | 3683 | 3500 | 3500 | 1486 | 2013 |
| மொத்தம் | 11,383 | 17,233 | 13,426 | 3,807 | 5,821 | 5,766 | 3,335 | 2.445 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மொத்த நிலுவை வீதவரி மீதியான ரூபா 5,803,760 தொகையில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 244,063 தொகையும் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 1,912,124 தொகையும் ஆகும். | செலுத்தப்படாத நபர்களின் ஆதனங்களை தடைசெய்தல் முதலியவற்றின் மூலம் மிகுதியான நிலுவை வருமானத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வீதவரியினை அறவீடு செய்வவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பழைய ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 1238,119 தொகையும் நடைமுறை ஆண்டின் ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 22,416 தொகையுமாக ரூபா 150,535 நிலுவை மீதி சபையினால் அறவிட வேண்டி இருந்தது. | மிகுதி நிக்கழ்ச்சித்திட்டங்களின் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஏக்கர் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின்கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 கணக்கு மீதிகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 204,049,443 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 2,027,873 தொகை 05 ஆண்டுகளை மிகைத்து காணப்பட்டது. | நிர்மாண வேலை கடன்பட்டோர் பணம் முத்திரை கட்டணம் நீதிமன்ற தண்டப் பணம் முதலிய பணங்களை மிக விரைவாக விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 சனவரி 10 ஆந் திகதி வடமேல் மாகாண சுற்றறிக்கையின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கடைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பஸ்தரிப்பிட கடைகள் மற்றும் சிறிய அளவிலான சந்தை கட்டிடத் தொகுதி கடைகள் 2016 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்பட்டு வருகின்றது. | 2022 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களில் எங்களால் மதிப்பீட:டுத் திணைக்களத்திற்கு இக்கடைகளை மதிப்பீடு செய்து தருமாறு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள து. | கடைகள் உரிய காலங்களில் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.2. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 ஊழியர்கள் தொடர்பாக ரூபா 13,956 அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது. | தகவல்களை தேடிப்பார்த்து அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடனை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபை பயன்படுத்துகின்ற 115 காணி கட்டிடங்களையும் ஒரு கெப் வாகனத்தையும் ஒரு ஜீப் வண்டியையும் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சொத:தக்களைப் பொறுப்பேற்பதற்கு காக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அடுத்துவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். | சபை பயன்படுத்துகின்ற சொத்துக்களைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத:தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிர்ணயிக்கப்பட்டவாறு வேலைகள் பூர்த்திசெய்யப்படாமையின் காரணமாக 08 வாடிவீட்டு கடைகள், குடிநீர் செயற்திட்டம் மற்றும் பஸ்தரிப்பிட வளவிலுள்ள மரக்கறி மற்றும் பழக் கடைகள் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாது. | மிஜன்சாரம் கிடைத்ததன் பின்னர் வாடி வீடு திறக்கப்படும் எனவும் பல்பொல குடிநீர் செயற்திட்டத்தினை துரிதமாக பொதுமக்களுக்கு ஒப்படைப்பதற்கும் பஸ்தரிப்பிட வளவிலுள்ள மரக்கறி மற்நும் பழக்கடைகளையும் துரிதமாக வேலைகளை முடிவுறுத்தி பொது மக்களுக்கு ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 04 வருமான விடய்ங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 15 சதவீத்திலிருந்து 99 சதவீத்தம் வரையான முரண்கள் காணப்பட்டமை மற்றும் 87 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 75 சதவீத்திற்கு மேற்பட்ட முரண்கள் காணப்படாமையின் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் இவ்வாறான பலவீனங்கள் ஏற்படாத வகையில் இம்முரண்கள் தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கும் அதனை அடிப்படையில் நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |